DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 105/2019 |
| Police Station | Manamadurai P.S |
| Deposition of Witness for | L.W.14/P.W.13 |
| Name | பிரதீப் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A1, A4, A5 absent. Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 22.04.2024 at 11.33a.m

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னை தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். திருப்புவனம் அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக பணிபுரிந்த போது கடந்த 16.05.2019 அன்று சுமார் இரவு 7.30 மணியளவில் விக்னேஸ்வரன் த/பெ.சோணை, அய்யம்போஸ் த/பெ. அய்யங்காளை ஆகியோரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார்கள். இரவு 7 மணியளவில் அவர்களை திருப்புவனம் மைதானத்தில் அடையாளம் தெரிந்த 7 ஆண் நபர்கள் வாளால் தாக்கியதாக கூறினார்கள். அவர்களை பரிசோதனை செய்ததில் விக்னேஸ்வரனுக்கு வலது முன்கை கீழே வெட்டுக்காயம் இருந்தது. அய்யம்போஸ் அவருக்கு தலையின் வலதுபுறத்தில் வெட்டுக்காயமும், இடது கை நடுவிரல் மற்றும் மோதிர விரலில் சிராய்ப்பு காயம் இருந்தது. இருவரும் தேவையான முதல்சிகிச்சை அளித்துவிட்டு, அவர்களை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். விக்னேஸ்வரன் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லாததால் அவரின் காயம் குறித்து கருத்து கூற இயலவில்லை. காயம்பட்ட அய்யம்போஸ் மதுரை அரசு மருத்துவமனையில் மூளை நரம்பியல் அறுவைசிகிச்சை நிபுணர் பூங்கொடி அவர்களிடம் மேல்சிகிச்சை பெற்று 17.05.2019 அனுமதிக்கப்பட்டு 28.05.2019ம் அன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள்

கொடுங்காயங்கள் என்று மருத்துவர் சான்று வழங்கியுள்ளார். அய்யம்போஸின் விபத்துபதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயம்பட்ட விக்னேஸ்வரனின் விபத்து பதிவேடு **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்தது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**